அ.வ.எண்: 77/2022 நாள்: 08.10.2025

வா.சா.1 – லெட்சுமி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை:</u>

1. தாவா வழக்கில் நான் தரப்பினராக உள்ளேன் என்றால் உள்ளேன். நான் என்ன பரிகாரம் கோரி தாவா வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் என் மகன் காணாமல் போய் விட்டான் அவனை இறந்ததாக அறிவிக்க கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு மகன்கள். என் மகனான வெங்கடாசலம் என்ற மருதவாணன் 10.09.2008 ஆம் ஆண்டு காணாமல் போய்விட்டார் என்றால் சரிதான். என் மகன் காணாமல் போனது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகாரோ அல்லது விளம்பர அறிவிப்பு செய்துள்ளேன் என்றால் செய்துள்ளேன் மேற்படி ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்து உள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் ஓய்வு பெற்ற பிடி அசிஸ்டன்ட் ஆவேன். கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கையின்படி என் இரண்டாம் மகனான வெங்கடாசலம் என்ற மருதவாணனுக்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான்.
2. மேற்படி கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கையின்படி சுமார் 14 வருடங்களுக்கு முன்பு காணாமல் போன என் இரண்டாவது மகன்

PREMI R Digitally signed by PREMI R Date: 2025.10.08 15:13:25 +0530

தற்பொழுது வரை வீடு திரும்பவில்லை என்று சொன்னால் சரிதான். எனது இரண்டாவது மகன் உயிருடன் உள்ளாரா என்பது தெரியவில்லை என்று கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் என் மகன் 2வது மகனுக்கான இறப்பு சான்றிதழ் கோரி விண்ணப்பித்ததை, அவர் குறித்த விவரம் தெரியாததால் இறப்பு சான்றிதழ் வழங்க முடியாது என்று வட்டாட்சியர் நிராகரித்து விட்டார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் கூறியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:</u> இல்லை

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.08 15:13:32 +0530